Chenkaantal
*A Bi-Yearly Peer-Reviewed Tamil Journal*

**Volume - 1, Special Issue - 1, January 2022** **E-ISSN: 2583-0481**

# Medicine in Tamil Literature

**Mrs. M. Rajeswari**, Research Scholar, Tamil Research Center, Arts College, Paramakudi, Tamil Nadu, India.
**ORCiD: https://orcid.org/0000-0002-0551-6773**
**DOI: 10.5281/zenodo.6619268**

## Abstract

*Literature is the reflective mirror of human culture and civilization in human's history. In Tamil Literature, "Thirukural", "Purananooru", "Nedunalvaadai" are having medical tips that instructs of Antidote, food as medicine, medication intake pattern, first aid, insights for a Doctor and surgery. These are found plentiful in the famous works of Tamil literature. The objective of this article is to decode such messages from the authentic sources.*

**Keywords:** Literature, Physician, Medicine, Antidote.

## References

[1] Parimelazhagar. *Thirukural Moolamum Uraiyum*. Kannadasan Publication, Chennai.
[2] Avvai Thuraisamy Pillai. *Purananooru Moolamum Uraiyum*. Suradha Publication, Chennai.
[3] Dr. Kathir Murugu. *Nedunalvaadai Moolamum Uraiyum*. Ilakiya Cholai Publication, Chennai.

**Author Contribution Statement:** NIL.
**Author Acknowledgement:** NIL.
**Author Declaration:** I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work.
The content of the article is licensed under https://creativecommons.org/licenses/by/4.0/ International License.

செங்காந்தள்

அறிஞர்களால் மதிப்பீடு செய்யப்படும் தமிழ் ஆய்விதழ்



மலர் - 1, சிறப்பிதழ் 1, தை 2053 இ - ஐ எஸ் எஸ் எண்: 2583-0481

# தமிழ் இலக்கியங்களில் மருத்துவம்

**திருமதி மா. இராஜேஸ்வரி,** முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ் உயராய்வு மையம்,

அரசு கலைக்கல்லூரி, பரமக்குடி., தமிழ்நாடு, இந்தியா.

ORCiD: https://orcid.org/0000-0002-0551-6773

DOI: 10.5281/zenodo.6619268

**ஆய்வுச்சுருக்கம்**

*மனித வரலாற்றில் மக்களின் பண்பாட்டையும் நாகரிகத்தையும் வெளிக்காட்டும் காலக் கண்ணாடியாக இலக்கியங்கள் திகழ்கின்றன. அவ்வகையில் தமிழ் இலக்கியங்களில் "திருக்குறள்", "புறநானூறு", "நெடுநல்வாடை" ஆகிய நூல்களில் காணப்பெறும் மருத்துவ குறிப்புகளான நோய் தீர்க்கும் மருந்து, உணவே மருந்து, மருந்து உட்கொள்ளும் முறை, முதலுதவி, மருந்து கொடுக்கும் மருத்துவர், மருத்துவ அறுவை சிகிச்சை முறை குறித்த கருத்துகளை ஆராயும் நோக்கில் இக்கட்டுரை அமைந்துள்ளது.*

**திறவுச் சொற்கள்:** இலக்கியம், மருத்துவன், மருந்து, நோய் மருத்துவம்.

**முன்னுரை**

மனதைப் பக்குவப்படுத்துவது இலக்கியம், மனம் என்பது சிந்தனை, அத்தகைய சிந்தனையை ஊக்குவிப்பது இலக்கியம், அதாவது தமிழ் இலக்கியம். இலக்கியங்களில் மக்களின் வாழ்வை அகம், புறம் என்றும் நிலப்பரப்பை ஐந்தாகவும், காற்றை நான்காகவும், மொழியை மூன்றாகவும், ஒழுக்கத்தை உயிராகவும் போற்றினர். இத்தகைய சிறப்புடைய தமிழ் இலக்கியங்களில் காணப் பெறும் மருத்துவ குறிப்புகளை ஆராய்வதாக இக்கட்டுரை அமைகின்றது.

**மருத்துவம்**

மருத்துவம் என்றால் என்ன? என்பதற்கு திருவள்ளுவர் தம் மருந்து அதிகாரத்தில் பின்வருமாறு விளக்கம் தருகின்றார்.

**உற்றவன் தீர்ப்பான் மருந்துழைச் செல்வானென்று**
**அப்பால்நால் கூற்றே மருந்து. (திருக்குறள் எண் - 950)**

அதாவது பிணிக்கு மருந்து என்பது நோயுற்றவன் அதனைத் தீர்க்கும் மருத்துவன். மருந்து, அதனை பிழைபடாமல் செய்வோன் என்று சொல்லப்பட்ட நான்கு பகுதியினை உடையதாகும் என்கிறார். வள்ளுவர், நோயுற்றவனுக்கு மன நோய் குறித்து நன்கறிந்த மருத்துவன் நோய் தீர்க்கும் மருந்தினை பிழையின்றி முறையாக வழங்குவதே "மருத்துவம்" ஆகும். இத்தகைய மருத்துவம் குறித்து பல்வேறு இலக்கியங்கள் பல வகையான சிந்தனைகளை எடுத்து இயம்புகின்றன. இருப்பினும் இக்கட்டுரையில் திருக்குறள், புறநானூறு, நெடுநல்வாடை போன்ற நூல்களில் காணலாகும் மருத்துவ சிந்தனைகள் எடுத்தியம்பப்படுகின்றன.

**திருக்குறளில் மருத்துவம்**

இயற்கை மருத்துவரான திருவள்ளுவர் தமது நூலில் "மருந்து" என்னும் அதிகாரத்தில் மனிதன்

நோயின்றி வாழவும் மருத்துவம் பற்றியும், மருத்துவன் எவ்வாறு செயல்பட வேண்டும் என்பது குறித்தும் விளக்கியுள்ளார். அதாவது,

**மிகினும் குறையினும் நோய்செய்யும் நூலோர்**

**வளிமுதலா எண்ணிய மூன்று (திருக்குறள் எண் –** 941)

உணவும் செயல்களும் ஒருவனுக்கு அளவுக்கு மிகுமாயினும் குறையுமாயின் வாதம் முதலாக கூறப்பட்ட மூன்று நோயும் துன்பத்தைக் கொடுக்கும். மனிதன் வாழ்வில் உணவை அளவோடு உண்ண வேண்டும். அளவில் மிகுந்தால் நோய் வரும். அளவில் குறைந்தாலும் நோய் உண்டாகும்.

**மருந்தென வேண்டாவாம் யாக்கைக்கு அருந்தியது**

**அற்றது போற்றி உணின் (திருக்குறள் எண் – 942)**

ஒருவன், தான் முன்னதாக உண்ட உணவு அற்ற நிலையை (சீரணித்ததை) அறிந்து பின் உண்ணுவானால் அவனுடைய உடம்புக்கு மருந்து என்று வேறு வேண்டாம். அளவோடு உண்டால் உடலுக்கு மருந்து தேவையில்லை. அளவில் நிறை, குறை ஏற்பட்டால் உடலில் நோயும் ஏற்படும். பின்பு மருந்தும் தேவைப்படும் மருத்துவ நூல் வல்லோர் வகுத்துக் கூறிய காற்று, நீர், உணவு முறையை சரியாக வகுத்துக்கொண்டால் நோயும் வராது மருந்தும் தேவைப்படாது.

**புறநானூற்றில் மருத்துவம்**

எட்டுத்தொகை நூல்களில் ஒன்றான புறநானூற்றிலும் மருத்துவம் தொடர்பான குறிப்புகள் காணக் கிடைக்கின்றன. புறநானூற்றில் தலைவியை பெண்கேட்டு வந்த வேந்தரை எதிர்த்துப் போரிட்டு ஓட்டிவிட்டு இவளது அண்ணலும், தந்தையும் தன் மீது பட்ட புண்ணில் வைத்து கட்டிய பஞ்சை கூட இன்னும் கலையாமல் வேலைத் தீட்டினர், என்பதை

**…உழக்கிக் குருதி ஓட்டி**

**கதுவாய் போகிய துதிவாய்**

**எஃகமோடு**

**பஞ்சியும் களையாப் புண்ணர்… (புறம். பா. எண் – 353)**

அதாவது சங்க காலம் முதல் தமிழர்கள் பஞ்சைப் பயன்படுத்தி போரில் காயம்பட்ட வீரர்களுக்கு காயத்தில் இருந்து வழியும் இரத்தத்தை நிறுத்தினர். இந்த மருத்துவ முறை இன்றளவும் பயன்பாட்டில் உள்ளது. இந்த பஞ்சினை முதலுதவி பெட்டியில் வைத்து மருந்து பொருளாக பயன்படுத்திய நிலையை அறிய முடிகின்றது. அதியமான், தனக்குக் கிடைத்த அரிய மருத்துவகுணம் வாய்ந்த நெல்லிக்கனியை ஔவைக்கு ஈந்தார். இந்த செய்தியை,

**பெருமலை விடரகத்து அருமிசை கொண்ட**

**சிறியிலை நெல்லித் தீங்கனி குறியாது…**

**… காதல் நீங்க, எமக்கு ஈத்தனையே. (புறம்.பா.எண் 91)**

எனும் பாடல் வழி அறியலாம். அதாவது பெருமலை வெடிப்பு ஒன்றில் பெறுவதற்கு அரிதாக "சிறியிலை நெல்லி பழம்" ஒன்றை உண்டால் சாகாமல் நீண்ட நாள் வாழ கூடிய அதன் தன்மையை எண்ணி தான் உண்ணாமல், ஔவையார் சாகாமல் நீண்ட நாள் வாழவேண்டும் என்று எண்ணி அவருக்கு அளித்தார். அதியமான் நெல்லிக்கனி சாவா மருந்தாகக் கருதப்பட்டது.

**நெடுநல்வாடையில் மருத்துவம்**

நெடுநல்வாடையில் அறுவை சிகிச்சை குறித்த கருத்துக்கள் காணக்கிடைக்கின்றன. பாசறையில்

வேல் பாய்ந்த வீரர்களை படுக்கையில் கிடத்தி அறுவை சிகிச்சை மூலம் வேல்களை அகற்றியதாக கூறுவர். மேலும் தலைவியின் ஆற்றாமை என்னும் நோய்க்கு மருந்தாக, செவிலியர் செயல்பட்டதை,

**மெல்இயல் மகளிர் நல்லடி வருட....**

**...செம்முக செவிலியர் கைம்மிகக் குழீஇ (நெடுநல்வாடை, பாடல் - அடி 150 – 152)**

என்ற அடிகளால் அறியலாம். அதாவது தலைவனைப் பிரிந்த தலைவியின் மனக்குமுறலை போக்க மென்மையான பெண்கள், "தலைவியிடம் உன் கணவர் விரைவில் வருவார், வருந்தாதே!" என்று மனதிற்கு இனியவை கூறி அவள் பாதத்தை வருடி வருத்தம் போக்கினர் என்பதாகும். அவர்கள் தலைவியின் மனதை தேற்றுவதன் மூலமாக தலைவியின் மன நோய் தீர்க்கபடுகிறது. இவ்வாறாக, தமிழ் இலக்கியங்கள் பலவற்றிலும் மருத்துவ சிந்தனைகள் நிரம்பிக் காணப்படுகின்றன. சங்க இலக்கியத்தில் தொடங்கி தற்கால இலக்கியம் வரை ஏராளமான மருத்துவம் தொடர்பான கருத்துக்கள் காணக்கிடைக்கின்றன. மேலும் சித்தர் இலக்கியங்கள் எதனை உண்ண வேண்டும் என்னும் மெய்ஞானத்தை கற்றுத் தருகின்றது.

**முடிவுரை**

திருவள்ளுவர் ஒரு இயற்கை மருத்துவர் என்பதை அவர் கூறும் மருத்துவ கருத்துகளிலிருந்து உணர முடிகின்றது. அவர் மருத்துவன், மருந்து, மருந்து உட்கொள்பவர், உணவு முறை குறித்தும் கூறுகின்றார். புறநானூற்றில், பெண்களுக்கு கர்ப்ப காலத்தில் ஏற்படும் வடுக்களுக்கு அத்திப்பாலை தடவி வடுநீக்கிய செய்தியை அறிய முடிகின்றது. நெடுநல்வாடையில் போர்க்களத்தில் பெற்ற புண்களுக்கு, பாசறையில் பல்வேறான மருந்து கொடுத்து, புண்களை ஆற்றிய செய்திகளையும் அறிய முடிகின்றது.

**துணைநூற்பட்டியல்**

[1] பரிமேலழகர். *திருக்குறள் மூலமும் உரையும்*. கண்ணதாசன் பதிப்பகம், சென்னை - 600017.

[2] ஔவை துரைசாமிப்பிள்ளை. *புறநானூறு மூலமும் உரையும்*, சுரதா பதிப்பகம், சென்னை.

[3] டாக்டர் கதிர் முருகு. *நெடுநல்வாடை மூலமும் உரையும்*. இலக்கியச்சோலை பதிப்பகம், சென்னை – 600108.

**நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி:** இல்லை.

**கட்டுரையாளர் நன்றியுரை:** இல்லை.

**கட்டுரையாளர் உறுதிமொழி:** இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை.

இக்கட்டுரை கிரியேட்டிவ் காமன்சு ஆட்ரிபியூசன் 4.0வின் https://creativecommons.org/licenses/by/4.0/ கீழ் பன்னாட்டு உரிமம் பெற்றுள்ளது.